In the Court of the Principal District and Sessions Judge, Dindigul

| | |
|---|---|
| MCOP.No.101/2020 | Deposition of Witness: PW.1 |
| Name: Palanichamy | Calling: |
| Father Name: | Religion: |
| Village: | Caste: |
| Taluk: | Age: |

Solemnly affirmed in accordance with the provisions of Indian Evidence Act X of 1873 on the day of 24-09-2025.

முதல் விசாரணை பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதை படித்துப்பார்த்து கையெழுத்து செய்தேன்.

11.05.2019 தேதியிட்ட முதல் தகவல் அறிக்கை உண்மை நகல்மதசாஆ.1

11.05.2019 தேதியிட்ட பிரேத பரிசோதனை அறிக்கை ஒளிப்பட நகல் மதசாஆ.2

15.05.2019 ம் தேதியிட்டஇறப்புச்சான்றிதழ் இணையவழி நகல் மதசாஆ.3

25.06.2016 தேதியிட்ட வாரிசு சான்று இணையவழி நகல் மதசாஆ.4

மனுதாரர்களின் வங்கி கணக்கு புத்தகம் 4 எண்ணம் அசலுடன் ஒப்பிட்டு சரிபார்க்கப்பட்ட ஜெராக்ஸ் நகல் மதசாஆ.5 வரிசை

மனுதாரர்களின் ஆதார் அட்டை அசலுடன் ஒப்பிடப்பட்ட நகல் 5 எண்ணம் மதசாஆ.6 வரிசை

TN-59-M-0699 வாகனத்தின் காப்பீடு ஒளிப்பட நகல் மதசாஆ.7 (3ம் எதிர்மனுதாரர் தரப்பு ஆட்சேபனையுடன்)

மனுப்படி உத்தரவாக பிரார்த்திக்கிறேன்.

3ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை :-

மதசாதஆ.7 காப்பீடு பாலிசியின் முதல் பக்கம் மட்டும் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். இறந்துபோன எனது தகப்பனாரின் வருமானத்தைக்காட்டுவதற்கு எவ்வித ஆதாரமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அவர் விவசாயம் என்பதை காட்டுவதற்கு வருவாய்த்துறை ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். விபத்து சமயத்தில்

என் தகப்பனாரின் வயது 77. அவருக்கு இருசக்கர வாகனத்தை ஓட்டுவதற்கு உரிய உரிமம் இல்லை என்றால் சரியல்ல. இருந்தது. அது தவறிவிட்டது. உரிமம் தவறிவிட்டால் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் மனு செய்தால் கிடைக்கும் என்றால் சரிதான். விபத்து சமயத்தில் என் தகப்பனார் தலைக்கவசம் அணியாமல் வாகனத்தை இயக்கியுள்ளார் என்றால் சரியல்ல. என் தகப்பனார் உரிய உரிமம் இல்லாமலும், தலைக்கவசம் அணியாமலும் இருசக்கர வாகனத்தை ஓட்டத்தெரியாமல் ஓட்டிச்சென்று 1ம் எதிர்மனுதாரரின் வாகனத்தில் அவராக மோதிவிபத்தை ஏற்படுத்தினார் என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரரின் ஓட்டுநரது கவனக்குறைவால் இந்த விபத்து நடக்கவில்லை என்றால் சரியல்ல. என் தகப்பனாரின் கவனக்குறைவால்தான் விபத்து நடந்தது என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரரது வாகனம் மேக்சிகேப் டூரிஸ்ட் வேன் என்றால் சரிதான். 1ம் எதிர்மனுதாரரின் ஓட்டுநருக்கு விபத்து தேதியான 11.5.2019ம் தேதியன்று பயணிகள் வாகனத்தை ஓட்டுவதற்கு உரிய உரிமம் இல்லை என்றால் சரியல்ல. அவருக்கு இலகுரக வாகனத்தை மட்டும் ஓட்டுவதற்குத்தான் உரிமம் உள்ளது என்றும் அவரது உரிமத்தில் பேட்ஜ் மேற்குறிப்பு இல்லை என்றும் சொன்னால் எனக்கு தெரியாது. 1ம் எதிர்மனுதாரர் விபத்து வாகனத்தை 2ம் எதிர்மனுதாரரிடமிருந்து விபத்துக்கு முன்னரே விலைக்கு வாங்கிவிட்டார் என்றும், பதிவு சான்று மாற்றிவிட்டார் என்றும் ஆனால் காப்பீடு மாற்றப்படவில்லை என்றும் சொன்னால் அதுபற்றி தெரியாது. 1ம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநருக்கு உரிய ஓட்டுநர் உரிமம் இல்லாமல் ஓட்டியது, காப்பீடு மாற்றம் செய்யாமல் இருப்பது எல்லாம் காப்பீடு விதிமுறைகளுக்கு எதிரானது என்றால் எனக்குத் தெரியாது. மசாஆ.7 முழுமையான ஆவணம் இல்லை என்றும், எதற்காக எக்காலகட்டம்வரை காப்பீடு செலுத்தப்பட்டுள்ளது போன்ற விவரங்கள் இல்லாததாலும் இவ்வாவனம் செல்லத்தக்க ஆவணம் இல்லை என்றால் சரியல்ல. அதனால் 3ம் எதிர்மனுதாரர் மனுதாரர்களுக்கு இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவரல்ல என்றும் 1,2 எதிர்மனுதாரர்களே இழப்பீடு செலுத்தவேண்டும் என்றும் சொன்னால் சரியல்ல. 2 முதல் 4 மனுதாரர்கள்

திருமணமாகி வெவ்வேறு ஊர்களில் வசித்து வருகிறார்கள் என்றால் என் அம்மா என்னுடன் இருக்கிறார். இரண்டு சகோதரிகளில் ஒரு சகோதரியின் கணவர் இறந்துவிட்டதால் எங்களுடன்தான் இருந்து வருகிறார். மற்றொரு சகோதரி வேறு ஊரில் இருக்கிறார். கோரியுள்ள இழப்பீடு அதிகம் என்றால் சரியல்ல.

மறு விசாரணை :– இல்லை

A MUTHUSARATHA
Digitally signed by A MUTHUSARATHA
Date: 2025.09.24 17:54:36 +0530

Principal District Judge,
Dindigul.